

Album 11 – In Your Presence – Songs of Surrender and Intimate Worship

Song 1 துதியின் சத்தத்தை தொனிக்கச்செய்து

Psalm 26 (vindicate me, O Lord, for I have walked in my integrity; I will bless the Lord in the great congregation); Psalm 27:4 (“One thing have I asked of the Lord… to gaze upon the beauty of the Lord and to inquire in his temple”); Psalm 100 (make a joyful noise to the Lord)

துதியின் சத்தத்தை தொனிக்கச்செய்து
உம் அதிசயம் யாவையும் சொல்லிடுவேன்
கர்த்தரின் ஆலயத்தை வாஞ்சித்து
உமது மகிமையைப் போற்றிடுவேன்

போற்றிடுவேன் போற்றிடுவேன் உமது மகிமையை போற்றிடுவேன் (2)
சொல்லிடுவேன் சொல்லிடுவேன் உமது அதிசயத்தை சொல்லிடுவேன் (2)

கர்த்தரே என்னை சோதித்துப்பாரும்
உமது சத்தியத்தால் நடக்கின்றேன்
கர்த்தரே என் இருதயத்தைப் புடமிட்டுப்பாரும்
உமது கிருபையால் நான் வாழ்கிறேன்

KJC DNN

வாழ்கிறேன் வாழ்கிறேன் உமது கிருபையால் வாழ்கிறேன் (2)
நடந்திடுவேன் நடந்திடுவேன் உமது சத்தியத்தால் நடந்திடுவேன் (2)

கர்த்தரே என்னை நியாயம் விசாரியும்
எனது உத்தமத்தால் நான் நடக்கிறேன்.
கர்த்தரே உம்மை நம்பியுள்ளேன்
உமது சபைகளில் உம்மைத் துதிப்பேன்

உம்மைத் துதிப்பேன் உம்மைத் துதிப்பேன் எல்லா இடத்திலும் உம்மைத் துதிப்பேன் (2)
நடந்து செல்வேன், நடந்து செல்வேன் உமக்காக நான் நடந்து செல்வேன் (2)